தினமணி

# லாபம் தரும் ரோஜா தோட்டம்

First Published : 05 May 2011 02:58:08 AM IST



பூண்டி ஒன்றியம் ரங்காபுரத்தில் உள்ள ரோஜாத் தோட்டம். (உள்படம்) விவசாயி வேலு.

திருவள்ளூர்: தோட்டப்பயிரில் ஒரு முறை முதலீடு செய்தால் 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து தினம், தினம் லாபம் தருவது ரோஜா தோட்டம்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பும் மலர்களில் ஒன்று ரோஜா. திருமண சுபக் காரியங்களுக்கும், இறந்தவர்களின் மேல் அணிவிக்கும் மாலைகளிலும் ரோஜாமலர் இடம்பெறும். ரோஜாவில் நாட்டு ரோஜா, பெங்களூர் ரோஜா, பன்னீர் ரோஜா, வெள்ளை ரோஜா, மஞ்சள் ரோஜா என பல வகையான ரோஜாக்கள் தமிழகத்தில் விளைகின்றன.

குறைந்த முதலீட்டில் அதிக லாபத்தை ஈட்டித் தரும் ரோஜா தோட்டம் குறித்து பூண்டி ஒன்றியம் ரங்காபுரத்தைச் சேர்ந்த விவசாயி வேலு என்பவர் கூறியது:

""ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் இருந்து ஒரு செடி ரூ.5 என்ற விலையில் 1600 செடிகளை வாங்கி வந்தேன். ரோஜா செடியை ஒரு அடிக்கு ஒரு செடி என இடைவெளி விட்டு நட்டு வைத்தால் ஏக்கருக்கு 3600 செடி வரை நட்டு வைக்க முடியும்.

ரோஜா செடிகளை பொறுத்தவரை நட்டு வைத்த 3 மாதத்துக்குப் பிறகு பூக்களை பறித்துக் கொள்ளலாம். தினமும் காலை நேரத்தில் பூக்களைப் பறித்து விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம். ரோஜா தோட்டத்தை பொறுத்தவரை பராமரிக்க ஆட்கள் அதிகளவில் தேவையில்லை. பராமரிப்பு செலவும் குறைவு.

மாதம் இருமுறை அதற்கு தண்ணீர் ஊற்றி தோட்டத்தைக் கிளறி அதற்கேற்றார் போல் உரங்களையோ அல்லது அதன் தேவைகளைப் பூர்த்தி செய்தால் ஒரு தடவை நட்ட செடியில் இருந்து 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து லாபம் பெறலாம்.

நான் பயிரிட்டிருப்பது நாட்டு ரோஜா. இந்தப் பூக்களை தினமும் காலையில் பறித்து திருவள்ளூர் உழவர் சந்தை அல்லது கோயம்பேடு மார்க்கெட் போன்ற பகுதிகளில் சென்று 100 ரோஜா ரூ.20 முதல் அன்றைய மார்க்கெட் விலை நிலவரத்துக்கேற்ப விற்று விடுவேன் என்றார்.

**பக்க விளைவுகள் ஏற்படுத்தாத தாவரப் பூச்சிக் கொல்லிகள்**

First Published : 05 May 2011 02:56:08 AM IST



கற்றாலை

கடலூர்: விவசாயிகள் தாவரப் பூச்சிக் கொல்லிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கி இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாக உள்ளது.

குறைந்த பரப்பளவு நிலத்தில், அதிக விளைச்சல் காண வேண்டும் என்ற ஆவல் தான் பசுமைப் புரட்சி திட்டங்களுக்கு வித்திட்டது. அதற்காகப் பயன்படுத்தப்படும் ரசாயன உரங்கள், ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளால், மனித இனம் பெருமளவுக்கு பாதிப்புகளை சந்திக்கும் நிலை உருவாகி இருக்கிறது. பல லட்சம் கோடி பணம், ரசாயன உரங்கள், ரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிலில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

ரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் ரசாயன உரங்களின் பயன்பாட்டால் அந்த ரசாயனங்கள் மனிதனின் உடலில் புகுந்து பல்வேறு நோய்களுக்கும், சுகாதாரக் கேடுகளுக்கும், பக்க விளைவுகளுக்கும் காரணமாகி விடுகின்றன.

உதாரணமாக தென்னை மரத்தில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்களை ஒழிக்க மோனோ குரோட்டோபாஸ், கார்போசல்பான் போன்ற மருந்துகளை தென்னையின் வேர்கள் மூலம் செலுத்தினர். இந்த மருந்துகளின் ரசாயனங்கள் இளநீரில் காணப்பட்டது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதன்பிறகுதான் தென்னை விவசாயிகள் விழித்துக் கொள்ளத் தொடங்கினர். வேப்பங் கொட்டைகளில் இருந்து தயாரிக்கப்படும் அசாடிராக்டின் போன்ற தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்த தற்போது தொடங்கியுள்ளனர். தாவரப் பூச்சிக் கொல்லிகள் கிராமங்களில் கிடைக்கும் தாவரங்களான ஆடாதோடா, நொச்சி, எருக்கு, வேம்பு,

சோற்றுக் கற்றாழை, எட்டிக் கொட்டை போன்றவற்றைக் கொண்டு, வேக வைக்கும் முறையிலும், ஊறல் முறையிலும் தயாரிக்கப்படுகின்றன.

ஊறல் முறை: நொச்சி, ஆடாதோடா, வேம்பு, எருக்கன், பீச்சங்கு (உண்ணி முள்), போன்றவற்றின் இலைகள் 2 கிலோ, எட்டிக் கொட்டை 2 கிலோ ஆகியவற்றை இடித்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். அவை மூழ்கும் அளவுக்கு 12 லிட்டர் மாட்டு சிறுநீர், 3 லிட்டர் சாணக் கரைசல் ஆகியவற்றில் 7 முதல் 15 நாள்கள் வரை ஊறவிட வேண்டும். இலைகள் கரைந்து கூழ் ஆகிவிடும். இதில் ஒரு லிட்டருக்கு 10 லிட்டர் தண்ணீர் கலந்து பயிர்களில் தெளிக்கலாம்.

வேக வைக்கும் முறை: மேற்கண்ட இலைகள், எட்டிக் கொட்டை தலா 2 கிலோ எடுத்து பாத்திரத்தில் இட்டு, 15 லிட்டர் நீரை ஊற்றி 2 முதல் 3 மணி நேரம் வேக வைக்க வேண்டும். வெந்தபின் சாற்றை வடித்து எடுக்கவேண்டும். ஆறியபின் அதில், ஒரு படி மஞ்சள் தூள் கலந்து 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். இதன்மூலம் கிடைக்கும் வடிசாற்றில், 100 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம். பூசண நோய் கட்டுப்பாட்டுக்கு மேற்கண்ட சாறில் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 500 கிராம் முதல் 1 கிலோ வரை கலந்து தெளிக்கலாம்.

நுண்ணுயிர் இலைக் கருகல் நோய்களுக்கு, சோற்றுக் கற்றாழை 3.5 கிலோ, இஞ்சி 200 கிராம், இவற்றுடன் புதினா அல்லது சவுக்கு இலை 2 கிலோ சேர்த்து மூழ்கும் அளவுக்கு நீர் ஊற்றி வேக வைக்க வேண்டும். ஆற வைத்து வடித்த சாற்றுடன் மஞ்சள் தூள் ஒரு படி கலந்து, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 500 கிராம் அல்லது ஒரு கிலோ கலந்து தெளிக்கலாம்.

வேப்பங்கொட்டை சாறு சிறந்த இயற்கைத் தாவர பூச்சிக் கொல்லி மருந்தாக பயன்படுகிறது. 5 கிலோ வேப்பங் கொட்டையை உரலில் இட்டு இடித்து, சல்லி சாக்கு அல்லது மெல்லிய துணியில் கட்டி, 10 லிட்டர் தண்ணீரில் 24 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் சாற்றினை பிழிந்து எடுத்து வடிகட்டி, 190 லிட்டர் தண்ணீர் கலந்து பயிர்களுக்குத் தெளிக்கலாம்.

மூலிகை மட்கா என்ற இயற்கைப் பூச்சிக் கொல்லி மருந்து, 5 வகையான மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

**நெல் விலை கடும் வீழ்ச்சி**

First Published : 05 May 2011 09:17:00 AM IST

கடலூர், மே 4: கடலூர் மாவட்டத்தில் தற்போது நெல் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் குளத்துப் பாசனம், ஆழ்குழாய் கிணற்றுப் பாசனம் மூலம் நவரை பட்ட நெல் சாகுபடி சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் செய்யப்பட்டு இருந்தது. தற்போது நெல் அறுவடை

நடந்து கொண்டிருக்கிறது. கடலூர், விருத்தாசலம், திட்டக்குடி தாலுகாக்களில் நெல் அறுவடை மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் நெல் விலையோ விவசாயிகள் எதிர்பார்த்தபடி கட்டுபடியான விலையாக இல்லை என்பதுதான் விவசாயிகளுக்கு அதிர்ச்சி அளிக்கும் விஷயம். கடலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தற்போது சுமார் 2 ஆயிரம் மூட்டை நெல் வரத்து உள்ளது. விலை 75 கிலோ மூட்டை ரூ. 750 முதல் ரூ. 950 வரை மட்டுமே விலை கிடைப்பதாக, மார்க்கெட் கமிட்டி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளை பொன்னி ரகத்துக்கு மூட்டைக்கு (75 கிலோ) கடந்த ஆண்டு ரூ. 1,150 வரை கிடைத்தது. ஆனால் இவ்வாண்டு ரூ. 900 வரை மட்டுமே கிடைத்து உள்ளது என்றார் அவர்.

கடலூரை அடுத்த கீழ்பூவாணிக்குப்பம், மேல்பூவாணிக்குப்பம், பூண்டியாங்குப்பம், கருப்பன்சாவடி குண்டயமல்லூர் கிராமங்களில் தற்போது நெல் அறுவடை மும்முரமாக நடந்து கொண்டு இருக்கிறது. இக்கிராமங்களில் தனியார் வியாபாரிகளே பெருமளவில் நெல் கொள்முதல் செய்கிறார்கள். 62 கிலோ மூட்டைக்கு, ரூ. 520 முதல் ரூ. 600 வரை மட்டுமே விலை கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

பொதுவாக தனியார் நெல் வியாபாரத்தில் தரகர்கள் எண்ணிக்கை அதிகரித்து விட்டதாகவும், தரகர்கள்தான் நேரடியாக விவசாயிகளை அணுகி நெல் வாங்குகிறார்கள். அவர்கள் மிகக்குறைந்த விலைக்கு நெல் வாங்கி, நல்ல ஆதாயமான விலைக்கு வியாபாரிகளிடம் விற்கிறார்கள் என்றும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் மார்க்கெட் கமிட்டி அதிகாரிகள் கூறுகையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தாண்டு விவசாயிகள் பலர், அதிகளவில் நெல்லை சேமித்து வைத்து இருக்கிறார்கள். ஜூன் மாதத்தில் நெல் விலை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேமித்து வைத்து இருக்கும் விவசாயிகளுக்கு அப்போது நல்ல விலை கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தக்காளி விலை கிலோ ரூ. 3 ஆகக் குறையவும் கூடாது, ரூ. 50 ஆக உயரவும் கூடாது. விளைபொருள்களின் விலை அடிமாட்டு விலைக்குக் குறையும் போது, விளை பொருள்களைச் சேமித்து வைத்து, நியாயமான விலை கிடைக்கும் போது விற்பனை செய்வதற்கு தேவையான வசதிகளை அரசு செய்து தரவேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**தேயிலை விவசாயிகளுக்கு 30000 மரக்கன்றுகள்**

First Published : 05 May 2011 09:19:55 AM IST

மஞ்சூர், மே 4: குந்தா வனச்சரகத்திற்கு உள்பட்ட தேயிலை விவசாயிகளுக்கு 30 ஆயி
ரம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும் என்று குந்தா வனச்சரகர் ராமசாமி புதன்கிழமை தெரிவித்தார்.

÷இது தொடர்பாக அவர் மேலும் கூறியது: நீலகிரி மாவட்டத்தில் தனியார் பட்டா நிலங்களில் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சில்வர் ஓக்மரக்கன்றுகள் இலவசமாக வழங்குவதுடன், அவற்றைப் பராமரிக்க ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

÷நடப்பாண்டில், குந்தா வனச்சரகத்திற்கு சொந்தமான பொங்கலட்டி நர்சரியில், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க சில்வர் ஓக் மரக்கன்றுகள் 25 ஆயிரம், விக்கி, நாவல், கிளிஞ்சி, செண்பகம் உள்ளிட்ட சோலை மரக்கன்றுகள் 5 ஆயிரம் தயார் நிலையில் உள்ளது.

÷தேயிலைத் தோட்டங்களின் நடுவே இம்மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதால், நிழல் தரும் மரங்களாக இவை இருக்கும். விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக 500 நாற்றுகளும், குறைந்த பட்சமாக 200 நாற்றுகளும் வழங்கப்படும். இலவச மரக்கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் வருவாய்த்துறை வழங்கியுள்ள பட்டா, சிட்டா நகலுடன் குந்தா வனச்சரகருக்கு விண்ணப்பித்து பயன்பெறலாம்.

**வாழைச் சாகுபடிக்கு 65% அரசு மானியம்**

First Published : 05 May 2011 02:54:53 AM IST



திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்டுள்ள வாழைக் கன்றுகள்.

விருத்தாசலம்: நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் கோமுகி நதி உபவடி நிலப் பகுதியில் வாழைச் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு அரசு 65 சதவீத மானியம் வழங்குகிறது.

இதுகுறித்து விருத்தாசலத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் பேராசியர் கா.சுப்பிரமணியன், வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் அருட்செந்தில் ஆகியோர் தெரிவித்தது:

தமிழகத்தில் உள்ள 63 ஆற்றுப்படுகை பகுதியில் விவசாயப் பாசனப் பரப்பை அதிகரிக்கும் வகையில் தமிழக அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள, நிலவள திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இதன்கீழ் விழுப்புரம், கடலூர், சேலம் மாவட்டத்தின் சில பகுதிகளில் கோமுகி நதி பாயும் விளை நிலங்களில் வாழை உற்பத்தியை அதிகப்படுத்தும் வகையில் 65 சதவீத மானியத்தை வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக வழங்குகிறது.

வாழை சாகுபடிக்கு ஏற்ற மண்ணின் தன்மை: வாழை பயிரிடுவதற்கு நல்ல வடிகால் வசதியுடைய அமில, காரத் தன்மை 5.5-7.5 வரையுள்ள மண் சிறந்ததாகும். காரத் தன்மை மிக அதிகமாக உள்ள உப்பு கலந்த களிமண் வாழைப் பயிருக்கு ஏற்றதல்ல. இத்தகைய மண்ணில் நுண்ணூட்டச் சத்துகள், மணிச்சத்து வாழைச் செடிக்கு எளிதில் கிடைப்பதில்லை. மேலும் சுண்ணாம்பு கற்கள் அதிகமுள்ள மண்ணாக இருப்பின் நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறை செடி வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் இருந்தே தெரியவரும்.

திசு வாழை: திசு வளர்ப்பு வாழைக் கன்றுகளை தேர்வு செய்து நடும்போது ஜூன் முதல் டிசம்பர் மாதத்துக்குள் நடவு செய்ய வேண்டும். திசு வாழைக் கன்றுகளை ஜனவரி முதல் மே வரையிலான காலங்களில் நடவு செய்தால் பாக்டீரியா நோய், வைரஸ் நோய்களின் தாக்குதல் அதிகமாக இருப்பதுடன் செடியின் வளர்ச்சியும் குறைந்து சில நேரங்களில் 5 மாதத்துக்கு உள்ளேயே குலை தள்ளும் நிலை உருவாகும்.

திசு வளர்ப்பு கன்றுகளை தேர்வு செய்யும் முறை: திசு வாழைக் கன்றுகளை தேர்வு செய்யும் போது 5 முதல் 6 இலைகள் உள்ள நன்கு வளர்ந்த செடிகளை தேர்வு செய்ய வேண்டும்.

நோய் தாக்குதல் இல்லாத ஆரோக்கியமான வாழைத் தோப்பில் 1.5 முதல் 2 கிலோ எடையுள்ள கன்றுகளை தேர்வு செய்து வேர்கள், அழுகிய பகுதிகளை நீக்கிவிட்டு கிழங்கிலிருந்து 20 செ.மீ. அளவுக்கு மேல்புறம் விட்டுவிட்டு மீதமுள்ள பகுதியை வெட்டி எடுக்க வேண்டும்.

வாடல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த கார்பென்டாசிம் 0.1 சதவீதக் கரைசலில் 5 நிமிடம் ஊற வைக்க வேண்டும். நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்த 4 பங்கு களிமண், 5 பங்கு நீருடன் சேர்த்து கரைத்த சேற்றில் கன்றுகளை நனைத்து ஒரு கன்றுக்கு 40 கிராம் என்ற அளவில் கார்போபியூரான் 3 ஜி குருணை மருந்தை கன்றில் தூவி பின்னர் நடவு செய்ய வேண்டும்.

நடவு முறை: நடவு வயலை உளிக்கலப்பை கொண்டு ஒரு முறையும் பின்னர் சட்டிக் கலப்பை கொண்டு ஒரு முறையும் உழவு செய்ய வேண்டும். பின் கொக்கிக் கலப்பை கொண்டு 2 முறை உழவு செய்ய வேண்டும். நடவுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு 1.5க்கு 1.5க்கு 1.5 அளவுள்ள குழிகளை 6க்கு 6 அடி அல்லது 5க்கு 7 அடி இடைவெளியில் எடுக்கவேண்டும். குழிக்கு 5 கிலோ அளவுக்கு தொழு உரத்தை மேல் மண்ணுடன் கலந்து குழிக்குள் இட வேண்டும்.

அத்துடன் வேப்பம்புண்ணாக்கு 500 கிராம் மற்றும் பியூரடான் 20 கிராம் இட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். 1 ஹெக்டேரில் நடவு செய்ய குறைந்தபட்சம் 3 ஆயிரம் வாழைக் கன்றுகள் வேண்டும்.

**உர மானியத்தில் மத்திய அரசின் முடிவு: உணவுப் பொருள்கள் உற்பத்தி குறையும் அபாயம்!**

கே.விஜயபாஸ்கர்

First Published : 04 May 2011 01:33:27 PM IST

ஈரோடு, மே 3: உர மானியம் குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவு உணவுத் தேவைக்கு இந்தியா சில ஆண்டுகளில் வெளி நாடுகளின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையை நோக்கித் தள்ளப்படும் சூழலை உருவாக்கியுள்ளது.

விவசாயத்தை பொறுத்தவரை தண்ணீருக்கு அடுத்தபடியாக மிக முக்கிய மூலப்பொருளாக உரங்கள் உள்ளன. இயற்கை உரங்களின் உற்பத்தி வாய்ப்பு குறைந்துவிட்ட நிலையிலும், நாட்டின் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய குறைந்த அளவு நிலத்தில் அபரிமிதமான உற்பத்தியைப் பெறவும் உரங்கள் கை கொடுக்கின்றன.

இந்தியாவை பொறுத்தவரை, விவசாயத்தை இரண்டாம் நிலை தொழிலாகச் செய்யும் பெரும் பண முதலைகளைத் தவிர, பிழைப்புக்காக விவசாயம் செய்யும் அனைவரும் இன்னும் கடன்காரர்களாகவே உள்ளனர். விவசாயிகளின் சுமையில் அரசும் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கத்தில் உர மானியம் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மானியத்தை கடந்த மார்ச் மாதம் வரை, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு மத்திய அரசு நேரடியாக வழங்கியது. இதன் மூலம் போக்குவரத்துச் செலவைக் கணக்கிட்டு குறிப்பிட்ட அளவு விலை நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த மானியம் காரணமாக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1.20 லட்சம் கோடி செலவாகிறது என்று கூறி, இந்த மானியத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்தது.

உரமானியத்தை சீரமைக்க கணினி ஆலோசகரான நந்தன் நில்கேனி தலைமையில் மத்திய அரசு குழு அமைத்தது. உரமானியத்தை ரூ.1.20 லட்சம் கோடியிலிருந்து ரூ.50 ஆயிரம் கோடியாக குறைப்பதாக உறுதி கூறியுள்ள நில்கேனி, அரசுக்கு சில பரிந்துரைகளை கடந்த ஆண்டில் அளித்தார்.

இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் மானியத் திட்டத்தில் மாற்றங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. புதிய திட்டத்தின் படி, மானியம் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும், இதற்காக வருவாய் துறையின் சான்று அடிப்படையில் ஒவ்வொரு விவசாயிக்கும் வேளாண்மை துறை பரிந்துரைப்படி உரத்திற்கு மானியம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு ஏடிஎம் அட்டை போன்று அடையாள அட்டை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய மானியத் திட்டத்தில், டிஏபி டன் ஒன்றுக்கு ரூ.18,474, பொட்டாஷ் டன் ஒன்றுக்கு ரூ.14,447, சூப்பர் பாஸ்பேட் டன் ஒன்றுக்கு ரூ.4,891 மானியம் அளிக்கப்படும். உரம் தேவைப்படும் விவசாயிகள், அடையாள அட்டையுடன் கடைகளுக்குச் சென்று, மானியம் போக

மீதிப் பணத்தைக் கொடுத்து உரத்தை வாங்கிக்கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் உரம் தேவைப்படுபவர்கள் மானியம் இல்லாமல் முழு தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம், புதிய மானிய திட்டத்தின் படி மொத்த விற்பனையாளர்களுக்கு அளிக்கப்படும். புதிய மானியத் திட்டத்தில் எஸ்டேட் உரிமையாளர்களுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமும் நடப்பு நிதி ஆண்டு மட்டுமே செயல்படுத்தப்படும். 2012-2013 நிதி ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மட்டுமே மானியம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போது 10 ஏக்கருக்கும் மேல் நிலமுள்ள விவசாயிகளுக்கு உர மானியம் கிடைக்காது.

இந்தியாவின் மொத்த விவசாயத்தில் ஏறத்தாழ 75 சத அளவு விவசாயம் கிணற்றுப் பாசனத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள 10 ஏக்கருக்கு குறைவான நிலம் உள்ள விவசாயிகளும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்தவர்களாக இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் கிணற்றுப் பாசனத்தை மட்டுமே அடிப்படை ஆதாரமாகக் கொண்டுள்ள 20 ஏக்கருக்கும் மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளும், கந்துவட்டிக் கொடுமையால் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்ளும் நிகழ்வுகளும் பல மாநிலங்களில் இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இத்தகைய அவல நிகழ்வுகள் தொடரும் இந்த நாட்டில் 10 ஏக்கருக்கும் மேல் நிலம் வைத்துள்ளவர்களுக்கு மானியம் கிடையாது என்ற வரைமுறை விவசாயம் செய்ய வேண்டாம் என்று அரசு வெளிப்படையாகச் சொல்லமுடியாமல், இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளது தெரியவருகிறது. 1970-ல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், விவசாயத்தின் பங்களிப்பு 19 சதம் ஆனால் தற்போது 5 சதமாகக் குறைந்துள்ளது. உணவுப்பொருட்களில் பெரும்பாலனவை கடந்த 5 ஆண்டுகளில் பல மடங்கு உயர்ந்துள்ளது. விவசாய உற்பத்தி குறைந்து போனதே இதற்குக் காரணம். இந் நிலையில் உர மானியத்தில் சீர்திருத்தம் என்ற பெயரில் மத்திய அரசின் அணுகுமுறைகள், உணவுப்பொருட்களை இறக்குமதி செய்ய ஒரு தனி துறையை உருவாக்கும் நிலைக்கு கொண்டுசென்றுவிடும்.

இதுகுறித்து, விவசாயிகள் அமைப்பை சேர்ந்த வழக்கறிஞர் சுபி.தளபதி தெரிவித்தது: தங்கத்தின் விலை போன்று உரத்தின் விலையும் நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கின்றது. புதிய மானியத் திட்டத்தில் தோட்டக்கலை துறை பயிர்களுக்கு மானியம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிகம் உள்ள தென்னை மரங்களும் தோட்டக்கலைத்துறை பயிர் வகையில்தான் பட்டியலிடப்பட்டுள்ளது. இதனால் தோட்டக்கலைத்துறை பயிர்களுக்கும் உர மானியம் வழங்குது குறித்து அறிவிக்க வேண்டும்.

உர மானியத்தில் சீர்திருத்தம் தேவை, அதே சமயத்தில் சாதாரண விவசாயிகள் பாதிப்படையக்கூடாது. 20 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் மானியம் தொடர வேண்டும். இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவில் 30 சத அளவு கூடுதலாக உரம், மானிய விலையில் வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டும். உர மானியம் குறித்து அரசு இறுதி முடிவு செய்யும் முன்பு விவசாய அமைப்புகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்த முன்வர வேண்டும் என்றார்.

தினமலர்

**கொடைக்கானலில் பிளம்ஸ் சீசன் துவக்கம்**

மே 05,2011,09:35



கொடைக்கானல் : கொடைக்கானலில் கோடை சீசன் பழங்களான பிளம்ஸ் வரத்து துவங்கியுள்ளது. விளைச்சல் இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. கொடைக்கானல் மேல்மலை கிராமமான அட்டுவம்பட்டி, பேத்துப்பாறை, பள்ளங்கியில் பிளம்ஸ் விளைகிறது. கோடைக்காலத்தில் மட்டுமே விளையும் பழம் என்பதால், பெங்களூரு, மும்பை, கேரளா ஆகிய இடங்களுக்கும் இங்கிருந்து விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இந்தாண்டு பூக்கும் பருவமான பிப்ரவரியில் பருவம் தவறி பெய்த மழையால், பிஞ்சிலேயே பூக்கள் உதிர்ந்துவிட்டன. தற்போது ஒரு கிலோ 80 முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஊட்டியிலும் எதிர்பார்த்த அளவிற்கு பிளம்ஸ் விளைச்சல் இல்லை. எனவே, இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**மத்திய அரசின் கொள்கையால் வெங்காயம் ஏற்றுமதி பாதிப்பு**

மே 05,2011,05:08



மும்பை:நாட்டில் வெங்காய உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், சர்வதேச சந்தையில் போட்டியிட இயலாத அளவிற்கு, ஏற்றுமதிக்கான குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், வெங்காய ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் இவ்வாண்டு வெங்காயம் அதிக அளவில் உற்பத்தியாகியுள்ளது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில், நாட்டின் வெங்காய ஏற்றுமதி 1.74 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 30 ஆயிரம் டன்னாக மிகவும் குறைந்து போனது.சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில், நம் நாட்டின் வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அர” நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச விலை, மிகவும் அதிகமாக உள்ளது. மத்திய அரசின் இக்கொள்கையால், சர்வதேச சந்தையில் போட்டியை சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், வெங்காய ஏற்றுமதி குறைந்துள்ளதாக வேளாண் கூட்டுறவு அமைப்பான 'நாபெட்' தெரிவித்துள்ளது.வெங்காய உற்பத்தி அதிகரித்ததால், அதன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை மத்திய அர”, சென்ற பிப்ரவரி மாதம் விலக்கிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, வெங்காய ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒரு டன் வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை, 375 டாலராக (17ஆயிரத்து 250 ரூபாய்) குறைக்கப்பட்டது.தற்போது இது, 225 டாலர் என்ற அளவில் உள்ளது. இதில், மேலும் 50 டாலர் குறைத்து, 175 டாலராக நிர்ணயம் செய்ய வர்த்தக அமைச்சகம், வேளாண் அமைச்சகத்திற்கு பரிந்துரைத்துள்ளது. இந்த விலையுடன், சரக்கு போக்குவரத்து செலவையும் சேர்த்தால், ஒரு டன் வெங்காயத்தின் விலை, 225 டாலர் என்ற அளவிற்கு உயரும் என, ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.எனவே, ஒரு டன் வெங்காயத்திற்கு 175 டாலர் என்ற விலை நிர்ணயம் கூட போதுமானதாக இருக்காது; மேலும் குறைக்க வேண்டும் என்றும், அவர்கள் தெரிவித்துள்ளனர். சென்ற டிசம்பர் மாதத்தில், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் வெங்காய விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. மேலும் பருவம் தவறிய மழையால், சந்தையில் வெங்காய வரத்து பாதிக்கப்பட்டது. தேவைக்கேற்ப, உற்பத்தி இல்லாததால், வரலாறு காணாத வகையில் ஒரு கிலோ வெங்காயம் 80 - 100 ரூபாய் வரை விற்பனையானது. இதையடுத்து,

மத்திய அரசு உடனடியாக வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது. அதன் பிறகு, கரீப் பருவத்தில் வெங்காய உற்பத்தி மீண்டும் அதிகரித்தது. நாட்டின் முக்கிய நகரங்களில், கடந்த இரண்டு மாதங்களாக, வெங்காயத்தின் விலை மிகவும் சரிவடைந்துள்ளது. சென்ற மார்ச் மாதத்தில், சென்னை, கோல்கட்டா, ஐதராபாத் உள்ளிட்ட நகரங்களில், ஒரு கிலோ வெங்காயம் 12 ரூபாய்க்கு விற்பனையானது.இது, தற்போது, 9 ரூபாயாக குறைந்துள்ளது.இதே போன்று டில்லி,மும்பை, ஆமதாபாத் உள்ளிட்ட நகரங்களில் வெங்காயம் விலை கிலோவிற்கு 4 ரூபாய் முதல் 6 ரூபாய் வரை குறைந்துள்ளது. மொத்த விலையில், ஒரு குவிண்டால் வெங்காயம், 600 ரூபாய் என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது.நடப்பு 2011-12ம் ஆண்டில், நாட்டின் வெங்காய உற்பத்தி 1.25 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற 2010-11ம் ஆண்டின், நாட்டின் வெங்காய ஏற்றுமதி 11 லட்சம் டன்னாக இருந்தது.

**காபி ஏற்றுமதி 50 சதவீதம் வளர்ச்சி**

மே 05,2011,05:05



புதுடில்லி:சென்ற ஏப்ரல் மாதத்தில், காபி ஏற்றுமதி 50.40 சதவீதம் அதிகரித்துள்ளது என, காபி வாரியம் தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், இந்திய காபிக்கு அதிக தேவைப்பாடு இருந்து வருகிறது. இதனால், இங்கிருந்து மேற்கொள்ளப்படும் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது.சென்ற ஏப்ரல் மாதத்தில், இந்தியாவிலிருந்து 42 ஆயிரத்து 611 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 50.40 சதவீதம் (28 ஆயிரத்து 332 டன்) அதிகம். இதே மாதங்களில், மொத்த காபி ஏற்றுமதி, டாலர் மதிப்பின் அடிப்படையில், இரு மடங்கு அதிகரித்து, அதாவது, 5.60 கோடி டாலரிலிருந்து (265 கோடி ரூபாய்)12.60 கோடி டாலராக

(555 கோடி ரூபாய்) உயர்ந்துள்ளது. .கடந்த 2010ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஒரு டன் காபி விலை 93 ஆயிரத்து 466 ரூபாயாக இருந்தது. இது, நடப்பாண்டு ஏப்ரல் மாதத்தில், 1 லட்சத்து 30 ஆயிரத்து 201 ரூபாயாக அதிகரித்து காணப்பட்டது.நடப்பாண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான, நான்கு மாத காலத்தில், 1 லட்சத்து 44 ஆயிரத்து 383 டன் காபி ஏற்றுமதியாகி உள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 46.13 சதவீதம் (98 ஆயிரத்து 801 டன் ) அதிகம்.இதே நான்கு மாத காலத்தில், டாலர் மதிப்பின் அடிப்படையிலான, காபி ஏற்றுமதி 21 கோடி டாலரிலிருந்து 44 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது,ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 1,006 கோடி ரூபாயிலிருந்து 2,041 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

**கரும்பில் சொட்டு நீர்பாசனம்: வேளாண்மை துறையினர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : மே 05,2011,00:12 IST

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பில் சொட்டு நீர்பாசனம் அமைத்து பயிரிட்ட வயல்களை வேளாண்மை துறையினர் ஆய்வு செய்தனர்.கள்ளக்குறிச்சி அடுத்த ஏமப்பேர், சடையம்பட்டு கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் கரும்பில் சொட்டு நீர்பாசனம் அமைத்து அந்த பகுதி விவசாயிகள் பயிரிட்டிருந்தனர்.அந்த விவசாய நிலங்களை விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் மணியன், வேளாண் துணை இயக்குனர் அன்பழகன், வேளாண்மை அலுவலர் சுப்ரமணியன் ஆய்வு செய்தனர்.சொட்டு நீர் பாசனம் அமைத்து கரும்பு பயிரிட்டுவதால் ஏக்கருக்கு 15 முதல் 20 டன் வரை கூடுதல் மகசூலும், 50 சதவீதம் நீரும் சிக்கனமாகிறது என்று விவசாயிகள் சக்திவேல், ராஜா தெரிவித்தனர்.சின்னசேலம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ், கள்ளக்குறிச்சி வேளாண்மை உதவி இயக்குனர்(பொறுப்பு) கோவிந்தன், வேளாண்மை அலுவலர் பொன்னுராசன் உடனிருந்தனர்.

**பள்ளப்பட்டி உழவர் சந்தையில் பால் விற்பனை செய்ய அனுமதி**

பதிவு செய்த நாள் : மே 05,2011,03:00 IST

க.பரமத்தி: "பள்ளப்பட்டி உழவர் சந்தையில், விவசாயிகள் பால் விற்பனை செய்து லாபம் அடையலாம்' என, மாவட்ட துணை வேளாண் இயக்குனர் ரவி தெரிவித்துள்ளார்.
அறிக்கையில் உள்ளதாவது: பள்ளப்பட்டி உழவர் சந்தை, பஸ் ஸ்டாண்டு அருகில் செயல்படுவதால் விவசாயிகள் மற்றும் காய்கறி வாங்குவோர் போக்குவரத்து வசதியாக உள்ளது. எலக்ட்ரானிக் தராசு மூலம் எடை போடப்படுகிறது. தினசரி 2,000க்கு மேற்பட்ட நுகர்வோர் சந்தைக்கு வருகின்றனர். இதனால் காய்கறிகள் விரைவில் விற்றுவிடுகிறது. ஒவ்வொரு மாதமும்

விற்பனை அதிகரித்து வருவதால் கூடுதலான காய்கறிகள் தேவைப்படுகிறது. காய்கறி பயிரிடும் பகுதி விவசாயிகள் உழவர் சந்தையை பயன்படுத்திக்கொள்ளலாம்.
காய்கறி மட்டுமல்லாமல், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் தரமான பால் மற்றும் பால் தொடர்பான மதிப்புக் கூட்டப்பட்ட தயிர், வெண்ணெய், நெய் உள்ளிட்ட பொருட்களை இங்கு விற்பனை செய்து கூடுதல் லாபமடையலாம். இதற்கு புதிய விவசாயிகள் அடையாள அட்டை பெற்றுக்கொள்ள பள்ளப்பட்டி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராஜேந்திரனிடம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

**பாசன வாய்க்கால் தண்ணீர் நிறுத்தம்: சாகுபடி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மே 05,2011,02:57 IST

குளித்தலை: பாசன வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் காரணமாக, நெல் சாகுபடி பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் புகார் கூறினர்.
குளித்தலை பகுதி கட்டளை மேட்டுவாய்க்கால் மற்றும் தென்கரை பாசன வாய்க்கால் மூலம் விவசாயம் நடக்கிறது. கடந்த வாரம் பெய்த மழையால் தென்கரை மற்றும் கட்டளை மேட்டு வாய்க்காலில் தண்ணீர் அளவு குறைக்கப்பட்டுள்ளது.
குளித்தலை, வதியம், கே.பேட்டை, பரளி, மேட்டுமருதூர், பணிக்கம்பட்டி, வளையப்பட்டி, இனுங்கூர், நங்கவரம், நச்சலூர், நெய்தலூர், பொய்யாமணி, குமாரமங்கலம் மற்றும் குளித்தலை, லாலாப்பேட்டை பகுதியில் பயிரிட்டுள்ள நெல் தற்போது "பூட்டு' பருவத்தில் உள்ளது.
பாசன தண்ணீர் குறைந்ததால், நெல் மகசூல் பாதிப்பும், எலி தொல்லை அதிகரித்து சாகுபடி பாதிக்கும்அபாயம் ஏற்பட்டுள்ளது. பாசனம் இல்லாமல், பயிருக்கு உரம், பூச்சிமருந்து பயன்படுத்தவும் முடியாது. நெல்லுக்கு முக்கியமா "பூட்டு' பருவத்தில் பொதுப்பணித்துறையினர் வாய்க்காலில் தண்ணீர் திறந்து, பயிரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி : வேளாண்மை இணை இயக்குனர்**

பதிவு செய்த நாள் : மே 05,2011,02:59 IST

கரூர்: "கரூர் மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளதாக' கரூர் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் ஜெகதீசன் கூறினார்.
மாவட்டத்தில் சாகுபடி குறித்து அவர் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 300 ஏக்கரில் பயிறு வகை, 290 ஏக்கரில்

நிலக்கடலை, ஆயிரம் ஏக்கரில் மா, 450 ஏக்கரில் சப்போட்டா, 100 ஏக்கரில் கொய்யா, 220 ஏக்கரில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. கோடை உழவுக்க விவசாயிகளை வற்புறுத்தியுள்ளோம். இதற்கு மண் மாதிரி அளித்து நிலத்தின் வளம் குறித்து அறிந்து கொள்ளவும் விவசாயிகளிடம் கூறியுள்ளோம்.

தரிசு நிலமேம்பாட்டு திட்டத்தில் கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் 20 கிராமங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வறட்சிக்கு இலக்காகும் கிராமங்களாக க.பரமத்தியில் 9, அரவக்குறிச்சியில் 9 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் தோகமலையில் 15 , கிருஷ்ணராயபுரத்தில் 6, அரவக்குறிச்சியில் 6 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது. மழைநீர் சேகரிப்புக்கு மண் வரப்பு, பண்ணைக்குட்டை, நிலம் சமன்படுத்தல் உள்ளிட்ட பணிக்கு 90 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. 36 ஆயிரம் பழக்கன்று மரம் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தில் 12 ஆயிரம் மரக்கன்று குளித்தலையில் வழங்கப்பட்டுள்ளது. கடவூரில் 5,000 கன்றுகள் வழங்கப்பட்டன.

தோகமலை யூனியனில், வடசேரி, பில்லூர், புழுதேரி, ஆர்.டி.மலை, கிண்ணிலிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டது. க.பரமத்தி யூனியனில் வைரமடை, தேவனாம்பாளையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : மே 05,2011,00:13 IST

செஞ்சி:எண்டோசல்பான் பூச்சி மருந்தை தடை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் செஞ்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.எண்டோசல்பான் பூச்சி மருந்தினால் மக்களின் உயிருக்கும், உடல் நலத்திற்கும் கேடு ஏற்படுவதால் இதை தடை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் செஞ்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.செஞ்சி கூட்ரோட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் மாதவன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், மா.கம்யூ., வட்ட செயலாளர் கோவிந்தசாமி , நிர்வாகிகள் வசுபாலன், நெடுஞ்சேரலாதன், முருகன் சிறப்புரை நிகழ்த்தினர்.

**காற்றுடன் மழை: வாழை மரங்கள் நாசம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,22:49 IST

கூடலூர் : கூடலூர் மங்குழி பகுதியில் நேற்று அதிகாலை மழையுடன் வீசிய பலத்த காற்றில் வாழை மரங்கள் முறிந்து நாசமாகின. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் கடந்த சில வாரங்களாக கோடை மழை பெய்து வருகிறது. இதனால், வெப்பத்தின் தாக்கமும் சற்று குறைந்து காணப்பட்டது. நேற்று காலை 4 மணி அளவில் கூடலூர் ஒட்டிய மங்குழி, அத்திபாலி பகுதியில் பலத்த மழை பெய்தது. சிறிது நேரத்தில் பலத்த காற்றும் வீசியது.
அப்பகுதியில் பயிராகியிருந்த நேந்திர வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. பாகற்காய் பந்தல்களும் காற்றில் தூக்கி வீசப்பட்டன. மின்சார கம்பியில் பாக்கு மரம் விழுந்து மின் துண்டிப்பு ஏற்பட்டது. குலை தள்ளிய வாழை மரங்கள் காற்றில் சாய்ந்ததால் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

**வன விலங்கு கணக்கெடுப்பு துவக்கம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,22:49 IST

கூடலூர் : முதுமலை புலிகள் காப்பகத்தில் நேற்று துவங்கப்பட்ட வன விலங்குகள் கணக்கெடுப்பு பணி 8ம் தேதி நிறைவு பெறுகிறது.நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், வறட்சி மற்றும் வனத் தீ காரணமாக ஏப்ரல் மாதம் 1ம் தேதி மூடப்பட்டது. கோடை மழையை தொடர்ந்து பசுமை ஏற்பட்டுள்ளதால் மே 1ம் தேதி திறக்கப்பட்டு, வன விலங்கு கணக்கெடுப்புக்காக 3ம் தேதி முதல் 8ம் தேதி வரை தற்காலிகமாக மூடப்பட்டது. நேற்று காலை முதல் முதுமலை புலிகள் காப்பகம், சீகூர், சிங்கார வனச்சரக பகுதியில் வன விலங்கு கணக்கெடுப்பு துவங்கப்பட்டது. முதுமலை புலிகள் காப்பக கள இயக்குனர் ராஜீவ் ஸ்ரீ வஸ்தவா, துணை இயக்குனர் அமீர் ஹஜா முன்னிலையில், நீலகிரி கானுயிர் பாதுகாப்பு சங்க நிர்வாகிகள், வன ஊழியர்கள் 80 பேர், ஊட்டி அரசு கலை கல்லூரி மாணவர்கள், மயிலாடுதுறை ஏ.வி.சி., கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் 80 பேர் என மொத்தம் 160 பேர் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.வனப்பகுதி 43 பகுதிகளாக (டிரான்சிட்) பிரிக்கப்பட்டு கணக்கெடுப்பு மேற்கொண்டுள்ளனர். நேர் கோட்டு முறையில் வன விலங்குகள் நேரடி நடமாட்டம் மூலமாகவும், எச்சம், கால்தடம் போன்ற அடையாளங்கள் மூலமும் வன விலங்கு கணக்கெடுப்பு பணி நடக்கிறது. ""வன விலங்கு கணக்கெடுப்பு பணிகள் 8ம் தேதி நிறைவு பெறுகிறது. 9ம் தேதி முதல் முதுமலை புலிகள் காப்பகம் திறக்கப்பட்டு வழக்கம் போல் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவர்," என கள இயக்குனர் ராஜீவ் ஸ்ரீ வஸ்தவா தெரிவித்தார்.

**8 ஆயிரம் மலர்களுடன் "மெகா ரோஜா' அலங்காரம்**

பதிவு செய்த நாள் : மே 04,2011,22:43 IST

ஊட்டி : ரோஜா கண்காட்சியின் போது சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில், 8 ஆயிரம் ரோஜாக்களை கொண்டு மெகா அலங்காரம் செய்வதென பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஊட்டியில் கோடை சீசன் களைகட்டியுள்ள நிலையில், வரும் 7ம் தேதி ரோஜா கண்காட்சியுடன் கோடை விழா துவங்குகிறது. இதற்கென ரோஜா பூங்கா சிறப்பான முறையில் தயார்படுத்தப்படுள்ளது. இதில், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோஜா ரகங்களில், பல வண்ணங்களில் ரோஜா மலர்கள் தற்போது பூத்துள்ளன. இந்தாண்டு ரோஜா கண்காட்சியின் போது சுற்றுலா பயணிகளை கவர "மெகா ரோஜா' அலங்காரம் அமைக்க பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஊட்டி ரோஜா பூங்கா தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் ஜெகதீஸ்வரன் கூறியதாவது; ரோஜா கண்காட்சிக்கான பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. பூங்காவில் உள்ள பெரும்பாலான செடிகளில் மலர்கள் பூத்துள்ளன. இந்தாண்டு ரோஜா கண்காட்சிக்காக 8 ஆயிரம் ரோஜாக்களை கொண்டு "மெகா ரோஜா' அலங்காரம் அமைக்கப்படுகிறது. சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், கொடைக்கானல், கோவை ஆகிய மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் சிறப்பு அலங்காரங்கள் அமைக்கப்படவுள்ளன. ரோஜா கண்காட்சியின் போது ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க இந்தாண்டு 10 லட்சம் ரூபாய் செலவில் பூங்கா சாலை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.இவ்வாறு ஜெகதீஸ்வரன் கூறினார்.கடந்த சில தினங்களாக ஊட்டியில் அவ்வப்போது பலத்த மழை பெய்கிறது. நேற்று முன்தினம் இரவு சுமார் இரண்டு மணி நேரம் பலத்த மழை பெய்தது. மழை தொடரும் பட்சத்தில் பூங்காவில் உள்ள செடிகளில் பூத்துள்ள மலர்கள் உதிர்ந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தோட்டக் கலை துறையினர் கவலையடைந்துள்ளனர்.

**கரும்பு பயிரை சேதப்படுத்தும்வேர்ப்புழுக்களால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மே 04,2011,22:12 IST

தேவதானப்பட்டி:கரும்பில் காணப்படும் வெள்ளைநிற வேர்ப்புழுக்களை கட்டுப்படுத்த ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது.
துரைச்சாமிபுரம், கோடாங்கிபட்டி, உப்புக்கோட்டை, சடையால்பட்டி, சின்னமனூர், பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி, வருசநாடு பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள கருப்பு வயல்களில் வெள்ளைநிற வேர்ப்புழுக்களின் தாக்கம் காணப்படுகிறது.கோடை மழைக்கு பிறகு இப்புழுவின் வண்டுகள் கூட்டுப்புழுவில் இருந்து வெளிவந்து அருகில் உள்ள வேப்பமர இலைகளை சாப்பிட்டுமண்ணிற்குள் முட்டைகளை இடுகின்றன.முட்டைகளில் இருந்து வெள்ளைநிற

வேர்ப்புழுக்கள் வெளிவந்து பயிரின் வேர் மற்றும் கட்டைகளை சாப்பிட்டு பயிருக்கு சேதம் ஏற்படுத்துகிறது. இவைகளை அழிப்பதற்காக ராஜ்ஸ்ரீ சர்க்கரை நிர்வாகம் சார்பில், இரவு நேரங்களில் விளக்கு பொறி வைத்து வேப்பமரத்தில் இருக்கும் வேர்புழுவின் வண்டுகளை கவர்ந்து அழிக்கும் பணி நடந்து வருகிறது. இதில், அந்தந்த பகுதி கரும்பு கோட்ட அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் இடையே கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகிறது.

தினகரன்

## பொள்ளாச்சியில் இருந்து சீனாவுக்கு ரூ.12 கோடி நார் ஏற்றுமதி

பதிவு செய்த நாள் 5/5/2011 1:14:16 AM



பொள்ளாச்சி : கோவை மாவட்டம், பொள்ளாச்சி பகுதியில் 4 கோடி தென்னை மரங்கள் உள்ளன. தென்னை நார் பொருட்களுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகமாக உள்ளது. இங்கு மட்டும் 400க்கும் மேற்பட்ட நார் தொழிற்சாலைகள் உள்ளன. நார் உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

சீனாவுக்கு அதிகளவில் நார் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அங்கு மெத்தை தயாரிப்புக்கு நார் பயன்படுத்தப்படுகிறது. சில மாதங்களாக சீனாவில் இருந்து ஆர்டர்கள் அதிகளவில் குவிந்துள்ளது. மாதம் ரூ.12 கோடி மதிப்புள்ள 10 ஆயிரம் மெட்ரிக் டன் நார் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கொரியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு நார்க்கழிவுகள் அதிகளவில் ஏற்றுமதியாகின்றன. மாதம் ஒன்றுக்கு ரூ.6 கோடி மதிப்பிலான 12 ஆயிரம் டன் நார்க்கழிவுகள் ஏற்றுமதியாகிறது. கோடைக்காலம் என்பதால், நார்களை உலர வைப்பது எளிது. உற்பத்தியும் எளிதாகியுள்ளது. இவ்வாறு நார் உற்பத்தியாளர்கள் கூறினர்.